# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## கல்விப் பீடம்

### கல்வியில் தத்துவமாணி (கலாநிதி) (PhD) பட்ட மற்றும் கல்வியில் தத்துவமாணி (MPhil) பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக - விண்ணப்பங்கள் கோரல் -2021/2022 கல்வியாண்டு

2021/2022 கல்வியாண்டுக்கான கல்வியில் தத்துவமாணி (கலாநிதி) (Ph.D) பட்ட மற்றும் கல்வியில் முதுதத்துவமாணி (M.Phil) பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக விண்ணப்பங்கள் – **14.02.2021** -இலிருந்து **14.03.2021** வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்நிகழ்ச்சி திட்டங்கள், நாவலையில் அமைந்துள்ள பிரதான வளாகத்தின் கல்விப் பீடத்தில் மட்டுமே நடைபெறும்.

**நிகழ்ச்சித் திட்ட மொழி மூலம்:** இந்நிகழ்ச்சி திட்டங்களை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மேற்கொள்ள முடியும்

## பொது அனுமதித் தகைமைகள்

| கல்வியில் தத்துவமாணி (கலாநிதி) | கல்வியில் தத்துவமாணி (MPhil) |
|---|---|
| விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:<br>1. கல்விப்பரப்பில் முதுதத்துவமாணி<br>அல்லது<br>2. இலங்கை தகைமை மட்டம் -9 (SLQF 9) அல்லது அதற்கு மேலதிகமான மட்டத்தில் கல்விப் பரப்பில், ஆய்வுடன் கூடிய முதுமாணிப் பட்டம்<br>அல்லது<br>3. இலங்கை தகைமை மட்டம் 6 இன் கல்விமாணி (சிறப்பு) பட்டத்தில் 0-4 எனும் அளவிடையில் குறைந்து GPA3.00 சித்தி அல்லது இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) அளவில் சித்தி அடைந்திருத்தல்.<br>அல்லது<br>4. பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமமான அல்லது உயர்ந்த தகுதியொன்று.<br>அத்துடன்<br>5. **கல்வி பீடத்தால் நிர்ணயிக்கப்பட்ட பிற குறிப்பிட்ட விசேட அனுமதித் தகைமைகள்** | விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:<br>1. கல்விப்பரப்பில் இலங்கை தகைமை மட்டம் -7 (SLQF-7) அல்லது அதற்கு மேலதிகமான மட்டத்தில் தகைமையொன்றைக் கொண்டிருத்தல்<br>அல்லது<br>2. இலங்கை தகைமை மட்டம் -6 (SLQF-6) இல் பொருத்தமான துறையில் குறைந்தது முப்பது (30) திறமை மட்டத்திலான சித்தியுடன் கூடிய இளமாணி பட்டமொன்று<br>அல்லது<br>3. பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமமான அல்லது உயர்ந்த தகுதியொன்று.<br>அத்துடன்<br>4. **கல்வி பீடத்தால் நிர்ணயிக்கப்பட்ட பிற குறிப்பிட்ட விசேட அனுமதித் தகைமைகள்** |

## கல்விப் பீடத்தில் அனுமதி பெறுவதற்கான விசேட அனுமதித்தேவைகள

- SLQF 9 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டங்களில் கல்வியில் முதுகலைமாணி தகைமை இல்லாத விண்ணப்பதாரிகள் தெரிவு செயல்முறையொன்றுக்குப் பிறகு கவனத்திற் கொள்ளப்படுவர்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் கல்வி பீடத்தால் நடத்தப்படுகின்ற கல்வியில் ஆராய்ச்சி முறையியல் பற்றிய குறுகிய கற்கைநெறியை இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு பதிவு செய்ய முன்னர் வெற்றிகரமாக முடிக்க வேண்டும் (18 திறமை மட்ட சித்தி அளவுடன் ஆய்வொன்றுடன் கூடிய இரண்டு வருட முதுமாணி பட்ட தகைமைகொண்டவர்கள் இதிலிருந்து விலக்களிக்கப்படுவர்).

## தெரிவு செய்யப்படும் செயலொழுங்கு

1. விண்ணப்பத்தாரிகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் உயர்ந்த கல்வித் தகுதிகள் ஆகியவற்றின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும், மற்றும்
2. கல்வியில் ஆராய்ச்சி முறைகளில் குறுங்கால கற்கை நெறியை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழின் பிரதி
3. கல்விப் பீட இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள வடிவமைப்பின் படி ஒரு விரிவான ஆய்வுப் பிரேரணை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பபடிவங்கள்** கல்விப்பீட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்க: https://www.ou.ac.lk/programmes-faculty-of-edu/

**ஆய்வுப் பிரேரணைக்கான மாதிரி வடிவம்** கல்விப்பீட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்க https://www.ou.ac.lk/programmes-faculty-of-edu/

மேலதிக தகவல்களுக்கு: உதவிப் பதிவாளர், (aredu@ou.ac.lk), கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட, இலங்கை

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.